10

R.R.383/55/78

சிரவணபுரம் தவத்திரு கந்தசாமி அடிகள்

அருளிய

பத்திராசலம்

# இராமச்சந்திரன் பிள்ளைத்தமிழும்

தவத்திரு தண்டபாணி அடிகள்

அருளிய

# மனுநெறித் திருநூலும்

குறிப்புரையுடன்

★

கழக வெளியீடு

0-15NKA8,R
N77
102769

சிரவணபுரம் தவத்திரு கந்தசாமி அடிகள்

அருளிய

# பத்திராசலம்
# இராமச்சந்திரன் பிள்ளைத்தமிழும்

தவத்திரு தண்டபாணி அடிகள்

208
23.2.78

அருளிய

# மனுநெறித் திருநூலும்

குறிப்புரையுடன்

★

இலக்கிய இளைஞர் (B. Litt)
தேர்வுக்குரிய பகுதிகள் மட்டும்

★

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140 பிரகாசம் சாலை, சென்னை-1.

1977

1977 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

O-,15NKA8,R
N77

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு : கசுஙிக

முதற்பதிப்பு : ஆகஸ்ட் 1977

102769
EGMORE, MADRAS-600 008
O31,1xN3
N77

RAMACHANDRAN PILLAITH THAMIZH
&
MANUNERITH THIRUNOOL

அப்பர் அச்சகம், சென்னை-600 001. (-/7)

# பதிப்புரை

பத்திராசலம் இராமச்சந்திரன் பிள்ளைத் தமிழ் என்னும் இந் நூல் ஆந்திர நாட்டில் கோதாவரி ஆற்றின் வடகரையில் பத்திராசலம் என்னும் ஊரின் அருகில் குன்றின்மீது கோயில் கொண்டுள்ள இராமபிரான்மீது பாடப்பட்டதாகும். ஆந்திர நாட்டுக் கோயில்களுள் இது மிகச் சிறந்து விளங்குகிறது.

இந்த நூலை இயற்றிய அடிகளார் கோவை மாவட்டம் சிரவணபுரம் கௌமார மடத்தினை நிறுவிய தவதிரு இராமானந்த அடிகளாரின் மாணவர் தவத்திரு கந்தசாமி அடிகள் ஆவர். இவருடைய நூல்கள் சொற்சுவை பொருட்சுவைகளோடு உளளங் கவரும் சிறந்த கருத்துகளையும் உடையன.

பிள்ளைத்தமிழ் நூலுக்குரிய முறைப்படி இந் நூலின்கண்ணும் நூறு செய்யுட்கள் உள்ளன. சென்னைப் பல்கலைக் கழகததில இலக்கிய இளைஞர் (B. Litt.) தேர்வுக்கு ஒவ்வொரு பருவத்தி லிருந்தும் முதல் ஐந்து ஐந்து செய்யுட்கள் மட்டுமே பாடமாக வைக்கப்பட்டுள்ளன. ஆதலால் அப் பகுதி மட்டுமே குறிப்புரை யோடு வெளியிடப்படுகின்றது. பத்திராசலம் இராமச்சந்திரன பிள்ளைத் தமிழில் உள்ள பாடப் பகுதியினை அச்சிட்டு வெளியிடு வதற்கு மனமுவந்து இசைவு அளித்தவர் சிரவணபுரம் கௌமார மடாலயத்தின் தலைவராக இருக்கும் தவத்திரு சுந்தரம் அடிகளார் ஆவர்.

திருவாமாத்தூர் கௌமார மடாலயத்தினை நிறுவிய தவத்திரு தண்டபாணி யடிகள் இயற்றிய 'மனுநெறித் திருநூலில்' இருந்தும அப் பாட திட்டப்படி 43ஆம அதிகாரம் முதல் 48ஆம் அதிகாரம முடிய 60 செய்யுட்கள் குறிப்புரையுடன் இப் பதிப்பில் சேர்க்கப் பெற்றுள்ளன. மனுநெறித் திருநூலில் உள்ள பாடப் பகுதியை அச்சிட்டு வெளியிட இசைவு அளித்தவர் திருவாமாததூர் கௌமார மடாலயத்தின் தலைவர் தவத்திரு முருகதாச அடிகளார் ஆவர். இவர்கள் இருவருக்கும் கழகத்தின் நன்றி பெரிதும் உரியது ஆகும். இலக்கிய இளைஞர் வகுப்பு மாணவர்கள் இந் நூற்பகுதிகளை விரும்பிக் கற்றுப் பயனடைவார்களாக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| I. | இராமச்சந்திரன் பிள்ளைத் தமிழ் | |
| 1. | காப்புப் பருவம் | 2 |
| 2. | செங்கீரைப் பருவம் | 6 |
| 3. | தாலப்பருவம் | 10 |
| 4. | சப்பாணிப் பருவம் | 13 |
| 5. | முத்தப் பருவம் | 17 |
| 6. | வாரானைப் பருவம் | 20 |
| 7. | அம்புலிப் பருவம் | 23 |
| 8. | சிற்றிற் பருவம் | 29 |
| 9. | சிறுபறைப் பருவம் | 32 |
| 10. | சிறுதேர்ப் பருவம் | 35 |
| II. | மனுநெறித் திருநூல் | 41 |

பத்திராசலம்

# இராமச்சந்திரன் பிள்ளைத்தமிழ்

## மூலமும் குறிப்புரையும்

### காப்பு

1. ஆறுவகை யாயுணரின் வேறுவகை யின்றியவ
பேதமய மாயறிந்தோர்க்
காறுவகை யன்புமிக் கூறும்வகை யின்புளத்
தமைகடைக் கண்ணுதவியே
கூறும்வகை முற்றுங்க டந்தவா னந்தநிலை
கூட்டிக் கவின்மானிடக்
கோலம்பொ ருந்திரா மானந்த நாதனடி
கொண்டுமிக வந்தனைசெய்வாம்.
ஏறும்வகை யின்றியுளி ரங்குமிட ருறுசிட்ட
ரினமுற்று நலமுற்றவே
இராவணன்மு னேருடலி ராவணஞ் சரமழைபெய்
இன்பக்க ருங்கொண்டலாய்
வீறுவகை யன்பர்க்க ளித்திடக் கோசலைதன்
மென்மணிவ யிற்றுதித்து
மெய்ப்பத்தி ராசலத் தமையிரா மன்பிள்ளை
விரிதமிழ்க் கினிதருளவே.

(குறிப்புரை) அறுவகைச் சமயங்கள் - சிவன், சத்தி, மால், முருகன், கணபதி, சூரியன் என்னும் அறுவர் பற்றிய சமயங்கள். அவபேதமயமாய் - வேறுபாடில்லாதபடி. (ஆறும்வகை) ஆறுவகை - ஆறுதல் பெறும்படி; உள்ளம் அமைதிபெற்று மகிழும்படி.

சிட்டர் - ஒழுக்கமுடைய அடியார். இராவணன் முன்னோர் - இராவணன முதலியோர். இராவணம் - இல்லாது அழியுமாறு. சரமழை - அம்பு மழை. பத்திராசலத்து உறையும் இராமபிரான் மீது இந்நூல் பாடப்பெற்றது.

## 1. காப்புப்பருவம்

### திருமால்

2. நச்சுகுத் திடுகூரெ யிற்றிரட் டையதான
நாவாய்த்த வாய்த்தலந்தோய்
நாகவணை மேற்சூற்கொண் மேகமணை திறமென்ன
நன்கறிது யிற்பொருந்தும்
அச்சுதக் கடவுளென நாமமுற் றுலகெலாம்
ஆயபெரு மாயனடிகள்
அகலாமல் அகமீதில் மிகநாடி ஏத்திமிக்
கன்பினிற் கும்பிடல்செய்வாம்
மெச்சுதன் மைப்பே ரறப்பயிர் பேரற
வெதுப்புவெங் கோடைமறமார்
வீரங்கெ டக்கடிது தீரம்பு மாரிபொழி
விரிகருணை யார்கருத்தோய்
பச்சுருவு காட்டியருள் நாட்டிடவெம் விழிவழிப்
பதிவிருந் தூட்டியென்றும்
பத்திரா சலமருவு பாலனைக் கனிவினொடு
பாலனம் செய்தருளவே. (க)

(கு - ரை.) நச்சு உகுத்திடு - நஞ்சினை உமிழ்கின்ற. கூர்மை + எயிறு = கூரெயிறு: எயிறு - பல். இரட்டையதான நா - இரட்டை நாக்கு. பாம்புக்கு இரட்டை நாக்கு உள்ளது நாக அணை - பாம்பு அணை. சூல்கொள மேகம் - கருக்கொண்ட மேகம். அறிதுயில் - யோக நித்திரை, அறிவுடன் கூடிய தூக்கம். அச்சுதன் - திருமாலுக்குரிய பெயர்களுள் ஒன்று. அழிவில்லாதவன் என்பது பொருள். பேர் அற - பேரும் அற்று அழியும்படி. வெங்கோடை மறமார் வீரம்கெட - கொடிய கோடையாகிய பாவத்

தின் மிக்க வீரம் கெடும்படி. அம்புமாரி - அம்பாகிய மழை, நீர் மழை. (அம்பு - கணை, நீர்).

### பரமசிவன்

3. தனத்தத்த தானன தான—தத்தனத் தாத்தன.

கதிர்க்கற்றை வீசிய சோமன் அலைப்பத்தி யார்நதி தூர்வை
கடுப்பக் குலாவர வேறு—செஞ்சடைக் காட்டினர்
கணைப்புட்ப மேவிடு மாரன் உடற்பற்ப மாயறு மாறு
கணத்தட்ட பாலநி லாவு—மொய்ம்புடைத் தீர்க்கணர்
கடற்பத்தி நீடிய பால னிடத்துய்த்த பாசமு லாவு
கரத்துட்டன் மீதுற வீசு—கஞ்சநற் றூட்டுணை
களைச்சித்த மேன்மற வாது பதித்திட்ட ஞானவி நோதர்
கருத்திற்சு கோததி பாய—நின்றவைப் பாட்சியர்
துதித்தற்பி னீள்வழி பாடு செயற்கொப்ப வூரன்மு னேலை
துணைக்கைக்க ணேகொடு காண—விந்தையிற் காட்டினர்
துணர்ப்பொற்பு ஞானமெய் வாவி யிடத்துய்த்த பான்மண நீடு
சுவைப்பற்பல் பாடல்வி னவி—டுஞ்செவித் தோட்டினர்
துணைப்பற்று நாமமெனவி ளருட்சித்தி நாவர சாழி
தொடக்குற்ற வார்சிலே மேன்மி—தந்திடக் கூட்டினர்
துளக்குற்ற மாயவி கார வினைத்துச்சில் வாழ்வறு மாறு
துடைத்தெற்குள் வீடருள்பாதம்-நெஞ்சமைத் தேத்துதும்
விதிர்ப்புற்ற தேவர்கள் யாரும் அரக்கர்க்குள் வாடிடுதீமை
விலக்கிச்சு கோதய வாழ்வி—லொன்றிடப் போற்றென
மிகப்பத்தி யோடறை கூவு பதத்திற்ப யோதர சோதி
விரிப்புற்ற மேனிகு லாவி—யஞ்சிறைத் தார்க்கியன்
மிசைப்பொற்பு லாவிய தோகை களிப்பக் குலாமுகில் போல
விழிக்கொப்பில் ஆரமுதான—இன்பமெய்க் காட்சிசெய்
விளக்கத்த யாவுட னேது மகத்தச்ச மேவலி ரான
வினைக்கெய்ப்பில் வானர ராதிர்—என்றவர்ப் போக்கிடன்
மதித்துற்ற சேய்தரு மாறு தனைப்பற்று கோசல பூமன்
மனத்துட் குதாகல மேவ—மங்களச் சீர்த்தகை
வசிட்டத்த போதன நேச அருட்கொற்ற வாரியன் ஞான
வளத்தொப்பி லாரிடி மாசி—ருங்கனுற் றூற்றியல்

மகத்திற்கு லாவவி யூடு சிறப்புற்ற நால்வர்க ளாநல்
மகப்பெற்று நீமகிழ் கூர்வை—என்கவுற் ருற்றலின்
வரச்சிற்ப மார்திரு மேனி யினிற்புக்கு மேதினி கூடு
மணிப்பத்தி ராசல ராம—சந்திரற் காக்கவே. (உ)

(கு - ரை) தூர்வை - அறுகம்புல், பற்பம் - சாம்பல். பாலம் - நெற்றி. தீக்கணர் — நெருப்புக் கண்ணினையுடையவர். கடற்பத்தி நீடிய பாலன் — மார்க்கண்டேயன். பாசம் — கயிறு கஞ்சம் - தாமரை மலர். சுக + உததி = சுகோததி; இன்பக்கடல். ஊரன் - சுந்தரமூர்த்தி நாயனர். சுவைப் பற்பல் பாடல் - தேவாரப் பாடல்கள். துணைப்பற்று நாமம் என விள் — நற்றுணையாவது நமச்சிவாயவே எனக்கூறிய. சிலை - கல். துளக்குற்ற - நடுங்க. வினை துச்சில் - வினையால் வந்த பிறப்பு. (வாழ்வு + அறுமாறு.) ஏத்துதும் - வணங்குவோம். சுகோதய வாழ்வு - கடல் போன்ற இன்ப வாழ்வு. பயோதர சோதி - மேகம் போன்ற நீலநிற ஒளி. அஞ்சிறைத்தார்க்கு — ஐம்புலன் அடக்கிய முனிவர்க்கு. மயிலுக்கு உவகை தரும் முகில்போலக் காட்சியளிக்கும்.

## சீதேவி

தனத்தத் தனனதந்த தானனத் தாத்தன.

4. அளத்தற் கரிதாமிஞ்சு பேரலைப் பாட்டொலி
அணிப்பத் திகளாரின்ப சீதளப் பாற்கடல்
அகத்திற் கனிவாய்வந்து காமர்முற் றேற்றிய
அருட்சித் திரமாயண்ட கோடிகட் காத்தவிர்
வளத்தற் புதநீர்கொண்ட மோகனச் சூற்புயன்
மணிப்பொற் பிசைகோலங்கொள் மாசுணச்சீர்க்கயன்
வரக்கௌத் துபமார்பின்கண் வாழ்வுடைப் பாக்கிய
மலர்ப்பொற் கிளியே உன்றன் வார்கழல் போற்றுவல்
துளக்கற் றியல்சீர்தங்கு கேகயத் தாட்கிசை
சுமத்திரைக் கொடியோடொன்று கோசலைக் கேற்றவிர்
துலக்கப் படவேவந்த நால்வரைப் பார்க்கமெய்
சுவர்க்கத் திறைபோலொன்றி லேனெனப் பார்த்திப

னுளத்திற் கரைதீரின்ப மேவிடக் காட்சிகொ
ளுருப்பெற்றமு தாமென்க மார்பினைப் போற்கவின்
உடைப்பத் திரவேதண்ட மார்தளிப் பாற்பொலி
யுயர்ச்சிச் செயகோதண்ட பாணியைக் காக்கவே. (௩)

(கு - ரை.) மாசுணம் - பாம்பு. கௌத்துபம் - ஒருமணி. கேகயத்தாள் - கைகேசி. தளி - கோயில். கோதண்டபாணி - கோதண்டம் என்னும் வில்லையுடையவன்: இராமன்.

## பூதேவி

தத்தன தானதான தானனத் தாத்தன,

5\. எற்றலை வேலையேழு நாலையொப் பாப்பொலி
யிட்டிடை மீதுசேலை யாமெனச் சேர்த்துயி
ரெட்டற மோடுபாவ நீடிலப் பாற்புக
விட்டுயிர் நாதன்மீதி லாதரத் தேற்றமெய்

துற்றவ ரேதன்மீது சேர்தரக் கூட்டிடு
முத்தம நீர்மைதேர வாரிசத் தாட்டுணை
யொத்தகை மேல்விடாத பூசனைப் பாக்கிய
வொப்பறு பூமிதேவி தாள்களைப் போற்றுவன்

கொற்றவ னேகைநீடு மாசமர்த் தேற்றமொல்
கொட்புறும் வாசியானை யூர்திறற் போர்க்களை
கொற்றமெய் ஞானதீர னுகுமக் காற்றவ
குப்பியல் கோலசீல கோசிகற் போற்றுபு

பற்றமை வேள்விசாடு தாடகைப் பேர்த்தையல்
பட்டிட வாளியேவி நீள்சிலைக் கேற்றடி
பத்திர நாமமேரு பாலகற் காக்கிய
பச்சைகொள் மேனிராம சாமியைக் காக்கவே. (௪)

(கு - ரை.) அலைவேலை ஏழு - கடல்கள் ஏழு இட்டிடை - சிறிய இடுப்பு.

### அம்பிகை

தனதன தத்த தானனத் தாத்தன.

6. கடாமரு மற்பெய் காய்சினக் கூற்றுறழ்
கயானனு ரக்க னீருரித் தோற்புனை
களாவைநேர் பொற்பு நீள்களச் சீர்ப்பினர்
கவானில்வாழ் மெய்த்த போபலப் பாக்கியம்

விடாகமா வற்பு தாகரப் பார்ப்பதி
விவாதர்கா ணற்ற ஞானவிற் பூத்தவிர்
விநோத நீடப்ப ராபரத் தேற்றருள்
விராவபா ரப்பொன் வார்கழற் போற்றுதும்

நிடேதகா மத்தொல் பாவவற் றீத்தொழில்
நிடேதமா கச்செய் பாதம்வைத் தோச்சுபு
நிதானமே வொப்பில் சீதையைக் காட்சிசெய்
நியாயசா பத்தை மீதுறத் தூக்கிவெந்

நிடாததோர் வெற்றி மேவிநற் ருர்த்தொடை
யிராதிவா னத்து வாள்களத் தேற்றிடு
மியாகமே யொத்த சீலமுற் றேற்றமெய்
திராமனீள் பத்தி ராசலற் காக்கவே. (ரு)

(கு - ரை.) கடாம் - மதநீர். கூற்று - யமன். கயானனரக்கன் - கயமுக அசுரன். களாவைநேர்......சீர்ப்பினர் - களாப்பழம் போன்ற திருநீலகண்டர். கவானில் வாழ் - தொடையில் வாழ்கின்ற. நிடேதம் - விலக்கு. வெந் இடாத தோர்வெற்றி - முதுகு காட்டாத வெற்றி.

---

## 2. செங்கீரைப் பருவம்

7. பரமெடுத் திடுமனத் துரமெடுத் திடுதவப்
பண்பார் கலைக்கோட்டவன்
பண்ணரு மகத்தினிற் பண்ணவர்கள் மண்ணவர்கள்
பாழியந் தவமான்மிய

வரமெடுத் திடலென்ன வலமெடுத் துப்பரி
மளந்துங் கிடச்சுழித்து
வந்தபிர சாதம தருந்தணிக் கோசலை
மணித்திரு வயிற்றமைந்தே
சரமெடுத் திடுகைத்த சரதமன் னவனின்ப
சாகரத் தமிழும்வண்ணஞ்
சரிதரத் திருமேனி கொண்டறப் பயிரினஞ்
சார்மறத் துரமருந்திச்
சிரமெடுத் திடுசமர்த் திரமெடுத் திடுமிறைவ
செங்கீரை யாடியருளே
சித்திரா கரபூம பத்திரா சலராம
செங்கீரை யாடியருளே. (௧)

(கு - ரை.) பரம் - பரம் பொருள். மனத்து உரம் - மன வலிமை. கலைக்கோட்டவன் - கலைக்கோட்டு மாமுனிவன். மகம் - வேள்வி. பண்ணவர் — தேவர். சித்திராகர - அழகுக்கு உறைவிட மானவனே. பூம - மன்னவனே.

8. தருமேனி வந்தவம ராவதித் தேவரோடு
தசரதப் பேர்மன்னவன்
தவமிக்க முனிவருட னுவமிக்க வரும்வீட
ணன்முதற் சற்சனர்கணிர்
கருமேனி வந்தமண் டோதரியொ டணியிராக்
கதமாத ரார்வலந்தோய்
கண்கள்வரை புரைபுயக் கண்டுடிப் பக்கௌசு
லாதேவி வானரமினுர்
பெருமேனி தோயிரா வணகும்ப கன்னன்முற்
பேசிராக் கதர்மெய்யிடம்
பெற்றகண் புயமிடம் பற்றித் துடித்தாடு
பெற்றியுற வற்புதந்தோய்
திருமேனி கொண்டவிறை யருண்மேனி வந்திடச்
செங்கீரை யாடியருளே
சித்திரா கரபூம பத்திரா சலராம
செங்கீரை யாடியருளே, (௨)

(கு - ரை.) தருமேல் நிவந்த - கற்பக மரங்கள் ஓங்கிய. தவம் மிக்க முனிவருடன் உவமிக்க வரும் வீடணன் - முனிவர்களுக்கு ஒப்பான வீடணன். பெண்களுக்கு வலக்கண்ணும் வலத்தோளும் துடித்தல் தீய நிமித்தமாகும். அவ்வாறே ஆண்களுக்கு இடக் கண்ணும் இடத்தோளும் துடித்தல் தீ நிமித்தமாகும்.

9. தூசலைத் திடுகொடிவிண் ணோர்தூச லைத்திடுந்
தோற்றம்விண் டோற்றமுற்றீர்
தோற்றுநீர் பட்டிடு பழங்கண்முற் றகலத்
துடைக்குமொரு வன்கரைக்கண்
வீசலைச் சரயூந திப்புடைய யோத்தியாம்
வியனகர ளிக்குமன்னன்
மெய்ப்பட்ட வர்த்தனர்கள் மகுடவர்த் தனரெலாம்
வீழ்ந்துதாழ்ந் தேத்திராணி
கோசலைக் கொப்பின்மக வாகினை னீர்கடிது
கொண்டாடி வண்டாடிடாக்
குளிர்கற்ப கத்துணர்ச் சோனைபெய் தென்னுடன்
கூடியா டுதிரெனுஞ்சீர்த்
தேசலை விரித்திடுமுன் வாசலையு டைக்குமர
செங்கீரை யாடியருளே
சித்திரா கரபூம பத்திரா சலராம
செங்கீரை யாடியருளே. (௯)

(கு - ரை.) தூசு அலைத்திடு கொடி - துணிக்கொடி. தோற்றம் - காட்சி. தோற்றம் - பிறப்பு. பழங்கண் — துன்பம். கற்பக மலரை வண்டு மொய்க்காது என்பது நூல்வழக்கு. சோனை — விடாமழை.

10. நயமேறி டுஞ்சுவைச் சுதைதனினு மிக்கான
நலமேறி டும்பவளவாய்
நகையூறல் வாரிவரு மழலையந் தீஞ்சொல்செவி
நன்கருந்தித் தசரதன்
புயமேறி டக்கொண்டு மெய்தவத் தொண்டராம்
புயநே ருளம்பொருந்தும்
புண்டரிக தாள்களைக் கண்களி லணைத்துட்
புறத்தினுங் கண்டருட்சின்

மயமேறி யுயர்தவப் பயனேறி டப்புரியு
மைப்படிவ நேர்தெரிந்து
மயிலான கோசலைதன் விழியின்ப மாய்க்கொங்கை
வழிகின்ற பாலருந்திச்
செயமேறி விளையாடு வியனீடு மபிராம
செங்கீரை யாடியருளே
சித்திரா கரபூம பத்திரா சலராம
செங்கீரை யாடியருளே. (ச)

(கு – ரை.) சுதை - அமிழ்து. நகையூறல் - வாயில் ஊறும் நீர். அம்புயம் நேர் உளம் - தாமரை மலர் போன்ற மனம். மைப் படிவம் – மேகம் போன்ற திருவுருவம். வியன் - பெருமை.

11, இடத்தா ளிணைப்புவி யமைத்தணி வலத்தா
ளெடுத்துவா னிடமேற்றுசீ
ரிசைக்காசி பன்துணைக் காதலிக ளாமென்
றிசைந்ததிதி யதிதிமைந்தர்
படத்தா மியற்றும்விளை யாற்றுட்ட ராமெனப்
பட்டவரை மண்கிடத்திப்
பரவுசிட் டரைவான் பதிப்பதி யென்வாழ்விற்
பதிப்பன்மண் பாற்பொருந்து
சடத்தாற் றவழ்ந்திடுகை வானரக் கும்புடன்
சார்வனென் றிடல்கடுப்பத்
தருதுணைக் கையூன்றி மெய்யூன்று தரிசனந்
தந்தருளி விரிகருணையாற்
றிடத்தாள நெஞ்சம் படத்தா ளமைத்தவிறை
செங்கீரை யாடியருளே
சித்திரா கரபூம பத்திரா சலராம
செங்கீரை யாடியருளே. (ரு)

(கு – ரை.) காசிப முனிவரின் மனைவிகள் இருவர். திதி, அதிதி என்பவர். வான்பதி - இந்திரன் ஊர். பதியென் வாழ்வு - வைகுந்தம்.

———

## 3. தாலப் பருவம்

12. கொடையுந் தியவைந் தருநிழற்செங்
கோல்கொண் டரம்பை மடமாதர்
கோலம் பொருந்திக் களிக்குமின்பக்
கோலா கலவாழ் வறக்கரந்தோய்
படையுந் துபுபோக் கியநிருதர்
பகைமுற் ருெழித்துச் சுவர்க்கவணிப்
பதியின் பதியாப் பதித்திடுமப்
பான்மை வினைச்சார் பநித்தியமென்
றுடையுந் தேவேந் திரனென்னை
யுவந்து காப்பா யெனக்கோயி
லுற்று வணங்க வூர்ந்தமுகி
லுயர்காப் பான்மேற் காப்பாகி
யடையும் பத்தி ராசலந்தோ
யரசே தாலோ தாலேலோ
அணிச்சீ தாபி ராட்டிமகிழ்
அமுதே தாலோ தாலேலோ. (க)

(கு - ரை.) ஐந்தரு - கற்பகம், பாரிசாதம் முதலிய ஐந்து வானுலக மரங்கள். படை - ஆயுதங்கள். நிருதர் - அரக்கர். சுவர்க்க அணிப்பதி - தேவருலகத் தலைநகரம். அநித்தியம் - நிலை யற்றது. காப்பான்மேற் காபபு ஆகி - சோலையின்மேல் காவலாகி.

13. பானல் விழிச்சிற் றிடைவேடப்
பாவை மார்க ளணியிசையும்
பரண்மே லுறுங்கான் மொழிகவரப்
படருங் கிளிகட் பார்த்திவைநம்
ஏனன் மணியார்ந் திடவடைந்த
வென்னக் கவணின் மீதுறவைத்
தெறிமா ணிக்க வினங்கணிறைந்
திருண்டு பகல்காண் பரிதாம்பைங்

கானல் வழியா ரிருள்கவர்ந்து
கன்மந் துலேயொப் பெனப்புரிந்து
கதிச்சீர் பொருத்துந் திருவருண்மெய்க்
காட்சிச் சகுனங் கடுக்குமிசை
யான லறும்பத் திராசலத்தெம்
அரசே தாலோ தாலேலோ
அணிச்சீ தாபி ராட்டிமகிழ்
அமுதே தாலோ தாலேலோ. (உ)

(கு - ரை.) பானல் - குவளைமலர். ஏனல்மணி - தினைப் புனத்துக் கதிர்கள். பைங்கானல் - பசிய மலை சார்ந்த சோலை. கன்மந்துலை ஒப்பு - இருவினை யொப்புப் போல இருளையும் வெயிலை யும் சமமாக்கி. சகுனம் - நன்னிமித்தம்.

14. கானந் தந்தோய் மலர்க்குலங்கள்
கஞலுந் தருக்கண் மிசைதாவும்
கவிக ளொளிமிக் களைதரவக்
கதிர்வீ சிடுகூன் முதுகமைந்த
பானந் தங்கைக் கொடுகவரிற்
பதிக்கச் சோலை யுட்புகுவார்
பகலோ னுச்சிக் கதிர்முழுதும்
பருகிக் குளிர்ச்சி பரப்பிமிசை
வானந் தந்தோய் நிலவுமணி
மருவுந் தாரா கணமுமிவண்
வாய்ந்த செயலற் புதங்காணு
மகிமை பொலிநாட் காட்டென்றுள்
ஆனந் தந்தோய் பத்திரவெற்
பரசே தாலோ தாலேலோ
அணிச்சீ தாபி ராட்டிமகிழ்
அமுதே தாலோ தாலேலோ. (௩)

(கு - ரை.) கானம் - வாசனை. மலர்க் குலங்கள் - பூக்களின் கூட்டம். கஞலும் - விளங்குகின்ற. கவிகள் - குரங்குகள். பால் நந்து - பால் போன்ற வெண்சங்கு. கவர் - கிளைகள். தாராகணம் - விண்மீன் கூட்டம். ஆனந்தந்தோய் - இன்ப மிக்க.

15. படிமீ தேறும் பிறப்பதனற்
பற்று பயனிப் பருப்பதநந்தோய்
படிமீ தேற லெனத்துணிந்தப்
படியே புரிதொண் டடியரடிப்
பொடிமீ தேற முடிகொடுமுன்
போந்த வரைமே லோர்களெனப்
போற்ற வவர்பின் வரும்பேறு
பொருந்தி லேமென் றிடும்பத்திப்
பிடிமீ தேறு முன்னவர்கும்
பிட்டுப் பெயரப் பின்னவர்முன்
பெயர்ந்தா ரிறையைக் கண்டனர்நாம்
பெறுவே மிவர்தென் றிசைமேலோர்
அடிமீ தேறும் பத்திரவெற்
பரசே தாலோ தாலேலோ
அணிச்சீ தாபி ராட்டிமகிழ்
அமுதே தாலோ தாலேலோ. (ச)

(கு - ரை.) படிமீது - பூமியின் மேல். பருப்பதம் - மலை. படி - மலைப்படிகள். தொண்டு அடியர்......வரை - தொண்டு செய்யும் அடியார்களின் பாததூளிகள் தன்மேற் படும்படி தலைமேல் கொண்டு நின்ற மலை.

16. இமைக்குந் தகையற் றிடும்விழியிந்
திரனு லமைந்த வோர்களங்கம்
இணைத்தாள் மிசைதோய்ந் துதிர்பொடிபட்
டிமைக்கு முன்பண் டையிலமைந்த
சுமைக்குந் தளந்தோ யகலிகைதன்
றூய தவத்திற் பெரிதாமெய்த்
தோற்றம் படைத்துப் பகவனிரு
துணைத்தா ளென்று முடியமைக்கில்
நமைக்கும் புடன்கும் பிட்டுமுடி
நண்ணுந் தொண்ட ரடிப்பொடிகள்
நாளும் படியும் பெருவாழ்வு
நம்பா னுறுமென் றெணிக்கோயில்

அமைக்குந் தன்மைப் பத்திரவெற்
பரசே தாலோ தாலேலோ
அணிச்சீ தாபி ராட்டிமகிழ்
அமுதே தாலோ தாலேலோ. (ரு)

(கு - ரை.) இமைக்குந்தகை யற்றிடும் - இமைக்கின்ற தன்மையற்றனவாகிய. இந்திரனால் அமைந்த ஓர் களங்கம் — இந்திரனாற் கற்பிழந்த குற்றம். உதிர் பொடிபட்டு - இராமனுடைய திருவடியினின்றும் உதிர்ந்த பொடி பட்டதனால். குந்தளம் — கூந்தல். கும்புடன் கும்பிட்டு - கூட்டத்தோடு வணங்கி.

———

## 4. சப்பாணிப் பருவம்

17. உரமுறப் புதல்வனுயர் சிரமுறக் கதிர்முடி
உவப்பிற் கவிப்ப னெனவே
உளமுற்ற தசரதனுள் வளமுற் றவாமுழுதும்
ஒழிவித்து மொழிவித்திடும்
வரமுறத் தருதிரென வேகேட்ட கேகயனன்
மகளக மகிழ்ச்சிமிகவே
வந்தனையெ னக்கனிவில் வந்தனைசெ யக்கணமன்
னவனுவலு மாற்றமென்னத்
திரமுறப் பரதனு டாளவாண் டிரேழு
செய்யவற் கலையுடுத்துச்
செழியகா னடைகொண்டு கானடைதி யென்றவவள்
திலகவா னனமதிக்குத்
தரமுறக் கூப்பலர்க் கரமுறக் கூட்டிநற்
சப்பாணி கொட்டியருளே
தாசலட் சியபத்தி ராசலத் திசையத்த
சப்பாணி கொட்டியருளே. (க)

(கு - ரை.) உள் வளமுற்ற அவா முழுதும் ஒழிவித்து — மனத்தில் வளத்துடன் எழுந்த விருப்பம் முழுவதையும் நீக்கி. மொழிவித்திடும் - முன்னே சொன்ன வரம்- தசரதன் கைகேசிக்குக்

கொடுத்த வரம். வந்து அனை எனக் கனிவில் வந்தனை செய் அக் கணம் - வந்து அன்னையே என்று விருபபத்தோடு வணக்கஞ் செய்த அந்த நேரத்தில். வற்கலை - மரவுரி கால் நடைகொண்டு கான் அடைதி - காலால் நடந்து காட்டை அடைவாயாக. மதிக்குக் கூம்பும் தாமரை மலர்போல, கைகேசியின் முக மதியின் முன் கூப்பிய கையுடன் இராமன நின்ருன் என்பது. தாசலட்சிய - அடியார்களின் குறிக்கோளாக உள்ளவனே.

18\. தீபங்க ளிற்கொள்சீர்த் தீபங்க ளென்றுறுந்
திரமுற்ற வரமுற்றிடும்
சேவகத் தனியாண்மை மேவகத் தடனீடு
திசையரசர் வசையரசராய்
மாபங்க முற்றுளச் சோபங் கலந்திடுபொன்
மலையனைய சிலையதனையோர்
வலமேவி டக்கரத் தலமே லமைத்திலகும்
வன்மையார் நாரிபூட்டித்
தூபங்கு லாவுமணி மாடமிசை புருவமாந்
தூயவிற் கோட்டி யிமையாச்
சுந்தரக் கண்ணம்பு பெய்குவா ளின்பந்
துணைக்கூட வேவளைத்துச்
சாபங்கொ டுத்தலிற் சாபந்து ணித்தகைச்
சப்பாணி கொட்டியருளே
தாசலட் சியபத்தி ராசலத் திசையத்த
சப்பாணி கொட்டியருளே. (உ)

(கு - ரை.) சீதையின்மேல் வைத்த காதல் தந்த ஊக்கத்தால் சிவதனுவை இராமன் ஒடித்தான என்று ஆசிரியர் குறிப்பிடுகிருர். வில்வளைக்கச் சென்ற இராமன் தெருவழியே செல்லும் போது மாடத்தின்மேல் நின்ற சீதையைக் கண்ட காட்சி இராமனுடைய உள்ளத்தை விட்டு அகலாமல் இருந்தது.

தீபங்கள் - தீவுகள். திபங்கள் — விளக்குகள். திசையரசர் - திக்குகளில் வாழும் அரசர். (வசை + அரசர்) வசையரசர், பழியுற்று வலிமையற்ற அரசர். மாபங்க முற்று - பெரிய அவமதிப்பு

அடைந்து. மலையனைய சிலை - சிவன் வில். வலம்மேவு இடக்கரம் - வெற்றி பொருந்திய இடக்கை. உச்சாகங் கொடுத்தலின்-உற்சாகங் கொடுத்ததனால். சாபந்தணித்த கை - வில்லை ஒடித்த கை.

19. காரணி மணிக்கதி ருலாவியம் போதிநிகர்
காட்சிபெற் றுப்பொலிதுணைக்
கண்ணால மென்றுபின் பமுதமய மாந்திருக்
கல்யாண ராமவென்ன
வாரணி பொருங்கொங்கை யின்பங் குலாமுத்த
மாலையா னந்தவிழிநீர்
மஞ்சனங் கொண்டவிரு மஞ்சனநன் மேனிகொளுன்
மாலையிட் டருளென்றிடத்
தேரணிகொள் மன்னவர்கள் மாதவப் பெருமுனிவர்
தேவர்கண மின்பமேவிச்
செயராம சந்திரபல் லாண்டுவாழ்ந் தருளெனச்
சீதாபி ராட்டிமகிழத்
தாரணிதொ ழுக்களத் தாரணி கரத்தினிற்
சப்பாணி கொட்டியருளே
தாசலட் சியபத்தி ராசலத் திசையத்த
சப்பாணி கொட்டியருளே. (௫)

(கு - ரை.) சீதைக்கு மணமாலை சூட்டிய கரத்தாற் சப்பாணி கொட்டும்படி வேண்டப படுகிறார்.

கடல் போன்ற தோற்றம் படைத்து விளங்கும் இரண்டு கண்களும் முதலில் விடம்போன்றும், பினபு அமுதம் போன்றும் உனக்கு ஆவதற்கான சீதை மஞ்சனம் கொண்ட — அபிடேகம் கொண்ட, மஞ்சு அன நன்மேனி - மேகம் போன்ற திருமேனியையுடைய. தாரணி தொழ — மண்ணுலகம் தொழ. களம்தார் அணி கரம் - கழுத்தில் மங்கலநாண் அணிந்த கை.

20. கமர்த்தலை விடுத்தவமு திற்கொடிய தென்னவன்
கார்த்தவீ ரியநாமமார்
காவலன் புரியுமக் கிரமமாற் றுமலிரு
கண்சிவப் பூறிநெஞ்சத்

தமர்த்தலறு வீரத்தி லரசரினு மந்தணர்க
ளாவார்கண் மேலென்றிட
வமரரும் பரசவென் கைப்பரசில் வேர்களைந்
தவிர்சமந் தப்பஞ்சகத்

தெமர்க்குத் தருப்பணஞ் செய்திடுவ னென்றவித
மிசைராமன் முற்குறுகுகா
வின்புலவும் வானகத் தின்புடைசெல் கின்றதவ
வேற்றமதை வாளிவலியாற்

சமர்த்துக் கவர்ந்தருள் சமர்த்துடைக் கைகளிலோர்
சப்பாணி கொட்டியருளே
தாசலட் சியபத்தி ராசலத் திசையத்த
சப்பாணி கொட்டியருளே. (ச)

(கு - ரை) கமர்த்தலை – நிலப்பிளப்பில். அமுதின் - அமுதம் போல. அக்கிரமம் - ஒழுங்கீனம். அமர்த்தலறு - போர் செய்தல் அறுமாறு. அமரர் - தேவர். பரச - வழிபட. சமந்தப் பஞ்சகம் – ஒரு திருவூர் விசேடம். சமர்த்து - எதிர்த்து. சமர்த்து - சாமர்த்தியம்.

21. பொய்த்துவக் குறுதமோ குணமுற்ற கருவியிற்
புணர்வலியு மசைராசதம்
போக்குற்ற தானபுன் புலவலியு மற்றுற்ற
புண்ணியத் தவர்கண்மருவும்

சத்துவக் குணமேசி ரந்தூக்கி நன்றரிய
தவமே புரிந்துனணியார்
சச்சிதா னந்தபரி பூரணகர ஞான
சகுணப்பி ரமமாகிநீள்

வத்துவிற் கூடியமை சகசநிட் டைப்பெரிய
வாழ்விற் கலந்துவக்கும்
மாண்புகரு தெனையுலகில் வீண்புரிய வைத்தவிதி
வல்லைபக் கென்றழிதரத்

தத்துவப் பிணியற நகைத்தணிக் கைகொடொரு
சப்பாணி கொட்டியருளே
தாசலட் சியபத்தி ராசலத் திசையத்த
சப்பாணி கொட்டியருளே. (ரு)

(கு - ரை.) பொய்த்துவக்குறு தமோ குணமுற்ற கருவி - உடம்பு. சகுணப்பிரமம் - அவதாரத்திருமேனி. வல்லே - விரைவில்.

---

## 5. முத்தப் பருவம்

22. உருகு மலர்ந்த சிந்தனையி
னுள்ளே யிடையீ டற்றுலவு
மொருமை யருமைச் சுதற்காணு
வொவ்வோர் கணமும் கற்பமெனப்
பெருகு மலர்ந்த பெருங்காதற்
பெயராத் துன்ப நீர்காணப்
பெற்ற போதிற் கரைகாணுப்
பேரா னந்த நீராகும்
குருகு மலர்ந்த கோசலைதன்
கொங்கை விம்ம லொழிதரப்பால்
குடித்தன் னையிநன் முகமதிக்குக்
குறையா ஆர்வக் கடற்பெருக்கா
முருகு விரிந்த கனிவாயின்
முகுந்த முத்தந் தருகவே
முதிர்சீர்ப் பத்தி ராசலத்தெம்
முதல்வா தருக முத்தமே. (க)

(கு - ரை.) உருகும் சிந்தனை, மலர்ந்த சிந்தனை எனக் கூட்டுக. சுதன் காணு ஒவ்வோர் கணமும் - மகனைக் காணுத ஒவ்வொரு கணப் பொழுதும். கற்பம் - கற்பகாலம். (மிக நீண்ட காலம்) முருகு - மணம்.

23. பழியுந் தியகை கேசிகொடும்
பண்டி யதனிற் பாலனெனும்
படிவந் தன்னைச் சுத்தியுறப்
பண்ணு கேனென் றிராப்பகலும்

விழியுந் தியநீ ராலலம்பும்
வேலை புரிந்தெவ் வேலையினும்
வேலை யனைய அருளுருவுள்
விரும்பி நினைந்து நினைந்துருகி
வழியும் பேரன் புடைப்பரத
வள்ளற் கருட்பா துகையுதவி
வருவே மீரே மூரண்டொழிந்து
வாழ்கோ சலத்துன் புடையென்ன
மொழியுந் தருமைச் செங்கனிவாய்
முகுந்த முத்தந் தருகவே
முதிர்சீர்ப் பத்தி ராசலத்தெம்
முதல்வா முத்தந் தருகவே. (உ)

(கு - ரை.) கொடும் பண்டி – கொடிய வயிறு. படிவம் தன்னை - வடிவத்தை. வேலை புரிந்து – செயல் செய்து. எவ்வேலை யினும் – எந்த நேரத்திலும். வேலையனைய அருள்உரு - கடல் போன்ற அருள் வடிவம். புடை - பக்கம்.

24. சீர லருஞ்செங் கோல்பிழையாத்
தீர மருவுந் தசரதன்றன்
செப்பு மறுப தாயிரமாத்
திகழாண் டன்பிற் செயுந்தவத்தாற்
சேர லரும்பண் பார்மகவாந்
திருமே னியைக்காட் டுபுகணிதஞ்
சேரா வண்ட கோடியெலாஞ்
செய்ய வயிற்றுட் கண்டமைந்தும்
வேர லரும்பு மலையனைய
வேந்தன் றேளின் மகவாகி
விளங்குந் தன்மா யத்தினுக்குள்
வியப்புத் தானே அடைந்துசிறு
மூர லரும்பும் கனிவாயின்
முகுந்த முத்தந் தருகவே
முதிர்சீர்ப் பத்தி ராசலத்தெம்
முதல்வா முத்தந் தருகவே. (௩)

(கு - ரை.) பிழையா - பிழையாத; தவறாத. காட்டுபு - காட்டி. வேரல் - பிரம்பு. சிறுமூரல் - புன்னகை.

25. கொற்ற வநுமா னுடன்சீதைக்
கொடியுள் ளையங் கூராமே
கோபப் பரசி ராமர்தவங்
கொண்ட நீர்மை மல்லிகைப்பூ
வுற்ற மாலை சூடுமிட
மிலக்கு வனுங்கா னடைந்ததிறம்
ஒப்பில் குகன்சேர் பரதனுள
முவக்க வணிச்சித் திரகூடத்
தற்ற மறுபா துகையளித்தல்
அவமார் காக்கைக் கண்ணறுத்தல்
ஆதி யடையா ளங்களுடன்
ஆழி யளித்து நடந்தகதை
மூற்ற வருள்செந் துவர்த்திருவாய்
முகுந்த முத்தந் தருகவே
முதிர்சீர்ப் பத்தி ராசலத்தெம்
முதல்வா முத்தந் தருகவே. (ரு)

(கு - ரை.) அசோகவனத்தில் இருந்த சீதைக்குக் கூறும்படி சில அடையாளங்களை இராமர் அனுமனிடம் கூறியனுப்பினர். அந்த அடையாளங்கள் இச் செய்யுளில் கூறப்பட்டுள்ளன. உள்+ஐயம்+கூராமே. ஆழி - கணையாழி. துவர் - சிவப்பு.

26. நத்தி யழைக்குங் காலுடனே
நண்ணு தவமே பாணித்த
நவையார் வருணன் காப்பாயுன்
நயனஞ் சிவப்புற் றெறிகணையாத்
தத்தி வரும்பே ரலைமாண்டு
தளம்பிக் குளம்புஞ் சலதியிடை
சார்ந்த முத்து மயிலையினிற்
சங்கத் தினிலா மிடங்கரினில்

நத்தி னிடையா முத்தனைத்து
நவைமிக் கமைய வெதும்பலிலோர்
நாளு மகத்துள் விரும்பிலன்மெய்
நாதங் கடந்த நாதவருண்

முத்தி யளிக்குஞ் செங்கனிவாய்
முகுந்த முத்தந் தருகவே
முதிர்சீர்ப் பத்தி ராசலத்தெம்
முதல்வா முத்தந் தருகவே, (ரு)

(கு - ரை.) நத்தியழைக்குங்கால் - விரும்பி யழைத்தபோது. அவமே பாணித்த - வீணே நேரங்கடத்திய. மயிலே – மீன். நவை - குற்றம். இடங்கர் – முதலை. சங்கம் – சங்கு. நத்து - சிப்பி. பிற இடங்களில் பிறந்த முத்துப் பயனற்றன என விலக்கப்பட்டன

---

## 6. வாரானைப் பருவம்

27. ஈனம் பொருந்து மூலமலத்
திருளிற் சடமொத் தியலணுக்கட்
கிசையுங் கருவி கரணமளித்
தின்ப துன்பச் செயலறியக்

கானம் பொருந்து மறைவிதித்துக்
கன்மந் துலையொத் திசைதெருட்சீர்
காட்டி யருளக் கருணையினுற்
கமஞ்சூற் கொண்டற் காட்சியினின்

ஞானம் பொருந்துந் திருமேனி
நயந்து காணு முபாசனைச்சீர்
நல்குஞ் சகுணப் பிரமநிலை
நாடி யுடலங் கரைவித்து

வானம் பொருந்தப் புரியின்ப
வாழ்வே வருக வருகவே
வரமார் பத்தி ராசலக்கண்
மணியே வருக வருகவே, (க)

(கு - ரை.) மூலமலம் - ஆணவமலம். அணுக்கட்கு - உயிர் கட்கு (சீவான்மாக்களுக்கு). கானம் - இசை. துலை – தராசு. தெருள் - ஞானம். கமம்சூல் கொண்டல் - நிறைந்த கருக்கொண்ட மேகம். சகுணப் பிரமநிலை - உருவமுடைய கடவுள் தன்மை.

28. முருந்தே நிகர்க்குந் தந்த பந்தி
மூகிலா மளக மின்னிடையார்
முகமா மதிக்கோ சலைதனிரு
முளரி விழியிற் பருகிமகிழ்
குருந்தே யாழ்மிக் கினிதொலியார்
குழலே நயமிக் கதுவென்னும்
கொள்கை யறவே குடிவாங்கக்
குதலை யெனவிண் ணவரருந்து
மருந்தே பொழியுஞ் செங்கனிவாய் மகவே
யரக்கர் கோடையற
மாய்க்க மின்னி யெழுந்தமரா
வதியீ ருந்த மனத்தகத்தில்
வருந்தேன் மின்னென் றுற்ற பெரு
வாழ்வே வருக வருகவே
வரமார் பத்தி ராசலக்கண்
மணியே வருக வருகவே. (உ)

(கு - ரை) முருந்து - மயிலிறகின் அடியில் உள்ள வெண் குருத்து. தந்தபந்தி – பல்வரிசை. அளகம் - கூந்தல். முளரி - தாமரை. குருந்து - இளங்குருத்துப் போன்ற குழந்தை. குதலை - குழந்தைகளின் சொல். மருந்து – அமுதம். குதலையென மருந்தே பொழியும் செங்கனிவாய். அரக்கர் கோடை அற – அரக்கர் என்னும் வெப்பம் நீங்க. வருந்தேன்மின் - வருந்தாதீர்கள்.

29. தருமந் தழைக்க மணியுருவந்
தாங்கி வருநீ யென்னையிவன்
தவமில் கொடியோ னென்றுபுறந்
தள்ள வழக்குண் டோவடியேன்

கருமந் தழைக்கும் பொய்மாயை
கடக்க வறியேன் மீதுமறக்
கருணை செலுத்தி மெய்ஞ்ஞானக்
கண்ணீந் தருளா தின்னமின்னம்
வருமந் தழைத்துற் ருயெனில்யான்
மற்ருர் கதியென் றடைவேனே
வற்ருக் கருணைச் சாகரமே
மகிமை பொருந்து தெய்வவருண்
மருமந் தழைக்க வுற்றபெரு
வாழ்வே வருக வருகவே
வரமார் பத்தி ராசலக்கண்
மணியே வருக வருகவே. (௯)

(கு - ரை.) மணியுருவம் – அழகிய வடிவம். வருமம் - வன்மம் - மாற்சரியம். சாகரம் - கடல். மருமம் - கமுக்கம், இரகசியம்.

30. சரத நிறைந்த பத்தியருட்
சலதி போலு முளம்படைத்துத்
தணியாக் காதன் மேற்றுளும்பும்
தகையி லிருகண் புனல்பொழியும்
பரத னெனநின் றிருவடியிற்
பதித்த நெஞ்சுஞ் சென்னிமிசை
பாணித் தலமுங் கொண்டுருகும்
பரம பாக வதர்பணிசெய்
விரத நிலையும் பதமலரின்
மீதாம் பொடியுத் தூளனஞ்செய்
மேன்மைத் தவமும் தந்துநின்ருள்
வீட்டிற் பொருத்தி யருளும்வகை
வரத வருட்சின் மயவின்ப
வாழ்வே வருக வருகவே
வரமார் பத்தி ராசலக்கண்
மணியே வருக வருகவே. (௰)

(கு - ரை) சரதம் — உண்மை. அருட்சலதி - அருட்கடல் அருள் சின்மயம் - அருள்ஞான வடிவம். வரதன் — மேன்மையுடையவன். உத்தூளனம் - தூள்.

31. திருவே வருக வென்னருமைச்
செல்வா வருக தேவர்தொழும்
தேவா வருக வுடலுளமுந்
தித்தித் துருகப் புரிதெய்வக்
கருவே வருக வென்னிரண்டு
கண்ணே வருக யான்புகுமெய்க்
கதியே வருக கண்டவர்கண்
கவர்ந்துட் புகுந்து தனையளிக்கும்
தருவே வருக வென்றணிக்கோ
சலைசீ ராட்டிப் பாராட்டச்
சரிக்குங் கரிய மாணிக்கத்
தபனு விதய மலர்மருவு
மருவே வருக பேரின்ப
வைப்பே வருக வருகவே
வரமார் பத்தி ராசலக்கண்
மணியே வருக வருகவே. (ரு)

(கு - ரை.) என்று அணி கோசலை சீராட்டிப் பாராட்ட - இவ்வாறு கூறி அழகிய கோசலை சீராட்டிப் பாராட்ட. தபனன் - சூரியன். மரு - மணம். வைப்பு - சேமநிதி.

———

## 7. அம்புலிப் பருவம்

### சாமம்

32. இனனதுமெய் வழியினிடை யிற்கூன்ற னுக்குலவு
மிளமையா கம்பெறுதலால்
இராக்கத விருட்டுணித் தும்பருக் காரமுத
மென்றுஞ் சிறந்திடுகையால்

வனமுற்ற பாகீர திந்தலைவ னுச்சிமிசை
வைக்குமிரு காற்பொலிவதான்
மாணுற்ற பரதனை மன்னவன் தன்னுட்சி
வழிமுதலெ னக்கோடலாற்
புனமருவு மானைப்ப டைக்கையொடு போய்க்கொன்று
போடவுமி சைந்திடுதலாற்
போர்வேட னுதணிக் குடையாக மருவுற்ற
பூரணக் கலைபொலிதலால்
அனகபத் திரவெற்பி ராமனுனை யொப்பனுல்
அம்புலீ யாடவாவே
ஆரணத் தலைகொள்பரி பூரணத் தலைவனுடன்
அம்புலீ யாடவாவே. (க)

(கு - ரை.) அம்புலி - நிலா. சாம, பேத, தான, தண்டம் என்னும் நால்வகை முறைகளுள் ஒவ்வொன்றுலும் சிற்சில கவிகள் பாடப்பட்டுள்ளன. முதன் மூன்று செய்யுட்கள் சாமம் (சமம்) என்னும் முறையைச் சேர்ந்தவை. ஆதலால் இரட்டுற மொழிதலாகப் பாடப்பட்டுள்ளன. நிலாவுக்கு இராமனை ஒப்பாகக் கூறியுள்ளார்.

**நிலா:** கதிரவனுக்குப் பின் தோன்றிக் கூனிய உடம்பு பெறுதலாலும், இரவில் கரிய இருளை ஒழித்துத் தேவருக்கு அமிழ்தம் ஈவதனுலும், கங்கையைத் தலையிற் கொண்ட சிவபெருமானை வணங்கிய பொழுது அவருடைய இரண்டு தாள்களிலும் விளங்கியதாலும், சகுந்தலையின் மகனை பரதன் தன்குல முதல்வனுகக் கொள்ளப் பெற்றதாலும், மானைப் படைக்கவும், அழிக்கவும் சம்மதிப்பதாலும், மன்மதனுடைய குடையாகிய பதினறு முழுக்கலை விளங்குவதாலும்.

**இராமன் :** கதிரவன் மரபில் பிறந்து வளைந்த வில்லையேந்திய இளமையான வடிவத்தைக் கொள்வதால், அரக்கராகிய இருட்டினை யழித்துத் தேவருக்கு அமுதம் போல விளங்குவதால் கங்கைக்கு அரசனுகிய குகனுல் தலையிலணியப்படும் கால்களுடைமையால், கைகேசியின் மகன் பரதனைத் தன் ஆட்சியின் முறைமைக்கு

102769
EGMORE, MADRAS

உரியவன் என ஏற்றுக்கொள்வதால், சிவமுனிவனுகி வள்ளியாகிய ஒரு மானைப் படைக்கவும், மாரீசனுகிய மானைக் கொல்லவும் மனம் இசைவதால், வேடர் தலைவனை குகனுக்குக் கருப்பஞ்சாறு போலப் பொலிதலால்;

இனன் - சூரியன். தனு - உடம்பு, வில். ஆகம் - உடம்பு. இராக்கத இருள் : உருவகம். பாகீரதி - கங்கை. வழிமுதல் - மரபுக்குரியவன.

33. மித்திர னுடன்கலந் தகமேற் புறத்திலகு
வேற்றுமை யுருக்காட்டலால்
விதியான தனையனைப் பண்பினிற் பெற்றுலக
விவகார சிட்டிதரலால்
உய்த்திடும் பகலவர்க் குள்ளேயொ டுங்கியிர
வுட்கதிர் விரித்திடுதலால்
உள்ளமத் தியிலுனை யமைத்துன தகத்தினிலு
முற்றுமா தவமீதலான்
மெய்த்திரம் பொலியவபி ராமனிந் திரனுகு
மிக்கநா மச்சிறப்பு
விண்டுவா மதிநலம் பெற்றதா லுனையொக்கு
மேன்மைசிறி துங்குறைகிலான்
அத்திர முடைக்கைபொலி பத்திரகி ரிக்கிறையொ
டம்புலீ யாடவர்வே
ஆரணத் தலைகொள்பரி பூரணத் தலைவனுடன்
அம்புலீ யாடவாவே, (உ)

(கு - ரை.) நிலா: கதிரவனுடன் கலந்து, உள்ளே கருப்பும் மேலே வெளுப்புமாகிய வடிவத்தைக் காட்டியதால், புதன் என்ற மகனைப் பெற்று, அரசாள வைத்ததால், சூரியனுக்குள்ளே ஒடுங்கி இரவில் கதிர் விரிப்பதால், அபிராமன் இந்திரன் என்ற பெயர்கள் உடைமையால்;

இராமன் : நண்பனுகிய சுக்கிரீவனேடு கூடி அவனுடைய அகத்துக்கும் புறத்துக்கும் வேறுபாடு காட்டியதால் அயனுகிய புதல்வனைப் படைத்து, உலகைப் படைக்கச் செய்தலால். சூரிய

0-,15 NKA8,R

னுக்கும் உள்ளீடாக இருந்து ஒளி பரப்புவதால், அபிராமன் உபேந்திரன் என்னும் பெயர்களைப் பெற்றதால், சந்திரனும் இராமனும் சமம் ஆவர்.

அத்திரம் - அம்பு. பத்திரகிரி – பத்திராசலம். ஆரணம் - வேதம்.

34. தாமதக் குணமேவு காமுகர்க் கிகலான
தன்மைபெற் றுப்பொலிதலாற்
சரராசி யொன்றுபய ராசிநண் ணுர்கண்மெய்
தங்குதிர ராசியமைவிற்
காமர்வடி வேந்தலான் மேற்கான வேலையாழ்
காலமிசை யுந்தணிமையாற்
காதலாம் புந்திவா ரத்திருவி ழாவணிம
கத்துவந் தாங்கு தகையாற்
பூமருவி னேருயிரி னுள்ளே கலந்துற்ற
போகமுற் றூட்டு செயலாற்
புகுமிரா கவனுனக் கிணையாவ னிவனலாற்
புகலநிற் குந்துணையிலை
ஆமகிமை யுன்னுளத் தேமதிகொ டாய்ந்திறையில்
அம்புலீ யாடவாவே
ஆரணத் தலைகொள்பரி பூரணத் தலைவனுடன்
அம்புலீ யாடவாவே. (௩)

(கு - ரை.) நிலா: தாமத குணம் பொருந்திய காமம் மிக்கவர்களுக்குப் பகைவனுவான். பிரிந்தவர்கள் பயக்கடலில் விழும்படி செய்யும் வடிவோடு கடலில் தோன்றுவான்; மேலைக் கடலில் ஆழவேண்டியபோது அதனை அணுகுவான் புதன் தன் மகனுகப் பிறந்தபோது திருவிழாக் கொண்டாடினுன். கலந்து வாழும் காதலருள்ளே புகுந்து இன்பமூட்டுவான்.

இராமன்: இராமனும் காமுகர்க்குப் பகைவனுவான். வில்லை யுடைய மன்மதனைப் போன்ற அழகுடையவன். பிரளய காலத்தில் கடல்மேல் துயில்பவன். புதன கிழமையில் வழிபடப் பெறும்

பெருமையுடையவன். உலகத்தில் உள்ள உயிர்களுக்குள் இருந்து இன்பம் விளைப்பவன்.

இகல் – மாறுபாடு. தாமதக் குணம் - முக்குணங்களுள் ஒன்று. காமர் - அழகு, மன்மதன். புந்திவாரம் – புதன் கிழமை. மகத்துவம் - பெருமை. பூ - பூமி.

பேதம்

35. காமுகர்க் கொப்பில்வட வாமுகத் தனலென்று
காணநின் றலரேற்குவாய்
காணுமிவன் மெய்த்தசர தன்றவத் தால்வரு
கலைக்கோட்டு மாமுனிசெயும்
தீமுகத் தமைவரப் பிரசாத வடிவந்
திரண்டருண்மெய் பெற்றசெல்வன்
செப்புநீ நாணுது நாண்மீன மங்கையர்
திளைப்புற்ற தன்றிநெஞ்சந்
தோமுகந் துற்றகுரு பத்தினியை யாண்டுசந்
தோடமிகு தோடமுற்றாய்
சொல்லுமிவ னேகதா ரங்கொள்ளும் விரதர்தஞ்
சூடாம ணித்தகையினன்
ஆமுகப் பொடுபத்தி ராசலன் கூவறவம்
அம்புலீ யாடவாவே
ஆரணத் தலைகொள்பரி பூரணத் தலைவனுடன்
அம்புலீ யாடவாவே. (௪)

(கு - ரை.) பேதம் - வேறுபாடு. இராமனுக்கும் சந்திரனுக்கும் உள்ள வேறுபாடுகள் நான்காவது ஐந்தாவது செய்யுள்களில் கூறப்படுகின்றன.

சந்திரனை விட இராமன் சிறந்தவன் என்பது இச் செய்யுளில் கூறப்படுகிறது. வடவாமுகத்து அனல் - கடலின் அடியில் இருக்கும் வடவை அனல். அலர் ஏற்குவாய் – பழிச் சொல்லைப் பெறுகின்றாய். தீ முகம் - வேள்வி நெருப்பு. நாண் மீனமங்கையர் - விண் மீனகள் இருபத்தேழு. நாண் மீனகளைச் சந்திரன் மனைவி

களாக மணந்தவன். குருபத்தினியையும் தவருன வழியில் கூடியவன். இராமன் ஒரே மனைவியை மணந்த ஒழுக்கமுடையவன். சூடாமணி - சிறந்த தலைமணி போன்றவன். உகப்பு - விருப்பம். கூவல் - கூப்பிடுதல்.

36\. இராக்கதர் தமக்குறவ ஞநின்று தானவ
னெனும்பெயர் படைத்தி ழிவைநீ
யிவனிமப் பகைவனுஞ் சூரியன் குலமீதெ
டுத்திட்ட உருவமுடனே
பராக்கமை யிராமனென் றியாவரும் பரவநிகழ்
பாக்கியமெய் மந்திரப்பேர்
படைத்திட்ட வன்றெரிதி நீயுடலின் மீதிற்
பதிந்துற்ற வோர்களங்கம்
பிராத்தவினை தீர்க்கமுடி யாச்சிறியை யிங்கிவன்
பேரரக் கர்ச்சாடியே
பெருமுனைவன் மனைவியக லிகைகளங் கந்தாள்
பெறுந்தூளி யான்மாற்றினன்
அராக்கணஞ் சூழ்பத்தி ராசலன் கூவலருள்
அம்புலீ யாடவாவே
ஆரணத் தலைகொள்பரி பூரணத் தலைவனுடன்
அம்புலீ யாடவாவே (ரு)

(கு - ரை.) சந்திரன் அரக்கருக்கு உறவாகித் தானவன் என்று பேர்பெற்று இழிவு அடைந்தான். இராமன் கதிரவன் குலத்தில் பிறந்து எல்லாரும் பாராட்டும் மந்திரமொழியைத் தன் பெயராகப் பெற்று மகிழ்ந்தவன். சந்திரன் தீர்க்க முடியாத களங்கத்தையுடையவன். இராமன் அகலிகையின் களங்கத்தையும் தன் கால் தூளினல் மாற்றியவன்.

தானவன் - அரக்கன். இமம் - பனி. பராக்கு - நோக்கம். மந்திரப்பேர் - இராமன் என்பதே மந்திரம். அராக்கணம் - பாம்புக் கூட்டம்.

———

## 8. சிற்றிற் பருவம்

37. ஓங்கிப் பொலியுந் தசரதன்ற
னுபய புய முங் கோசலைதன்
னுடைய மடியுங் கண்ணிணையு
முனது கமலத் திருவடிகள்
நீங்கிற் றென் று நீங்காதே
நீர்மிக் கிறைத்து வருந்தியுறு
நீர்மை யறியாய் போல்யாமுன்
னிறைக்குந் தவத்தின் பயனுயெம்
பாங்கிற் பொருந்துந் தெரிசனைக்குட்
பரமா னந்தம் விரவின நின்
பாதங் களைப்பங் கசமெனயாம்
பகர்சொற் காக்கும் பண்பென்னத்
தீங்கிற் பொருந்தச் சிறியேஞ்செய்
சிற்றில் சிதையேல் சிதையேலே
திருப்பத் திரவெற் பிசையருமைச்
செல்வா சிற்றில் சிதையேலே.　　(க)

(கு - ரை.) உபய புயம் - இரண்டு தோள்கள். நீர்மை - தன்மை. 'தீங்கிற்பொருந்தச்சிதையேல்' எனக் கூட்டுக. பங்கசம் - தாமரை.

38. ஆற்று மகத்தை யழிக்குமிக
லமைதா டகையை வதையாம
லரிவை யெனவே நின் றுலக
மனைத்தும் படைத்த கோசிகன்றுன்
சாற்று மொழியை வேதமெனத்
தலைக்கொண் டுடனு ருயிர்கவரும்
சரம்விட் டருணின் பெருந்தகைமை
தனக்குன் றிருத்தாட் டுணையுமீள
தேற்று மகிழ்வா லதற்கொரங்க
மென் று விளையா டா நின்றே
யின்பக் கண்ணீ ராட்டுமெமை
யின்னற் கண்ணீ ராடியுறும்

சேற்று ளழுந்தச் சிறியேம்யாம்
செய்யுஞ் சிற்றில் சிதையேலே
திருப்பத் திரவெற் பிசையருமைச்
செல்வா சிற்றில் சிதையேலே. (உ)

(கு - ரை.) மகம் - யாகம், வேள்வி. மிகல் - செருக்கு. சேற்றுள் அழுந்தச் சிதையேல் என இயைக்க. தாள் + துணை = இன்பக் கண்ணீர் X இன்னற்கண்ணீர்.

39. மருப்பா யணிக்கொந் தளகபந்தி
மயிலா கியகே கயன் மடந்தை
வலிது தேடி வைத்தமணி
மகுடம் புனையான் சடைதாங்கி
யுருப்பா லவிர்வற் கலையுடுத்தி
யோவாக் காதற் பெருவெள்ள
முளமீ தமையப் பெறும்பரத
னெப்பு மரசிற் பெரிதென்றுள்
விருப்பா லெய்தும் பாதுகையின்
மேற்சங் கவிர்சக் கரக்குறிகண்
மிளிர வமைத்துத் தந்தசுர
வேத நாத முடித்தலந்தோய்
திருப்பா தத்தாற் சிறியேஞ்செய்
சிற்றில் சிதையேல் சிதையேலே
திருப்பத் திரவெற் பிசையருமைச்
செல்வா சிற்றில் சிதையேலே. (௩)

(கு - ரை.) மரு - மணம். கொந்து - கொத்து. அளக பந்தி - கூந்தல். வற்கலை - மரவுரி. இராமன் தன் திருவடிகளைப் பாதுகைகளின்மேல் வைத்தபோது அவற்றிலுள்ள சங்கு சக்கர (இரேகைகள்) வரிகள் அப் பாதுகைகளிற் பொருந்தின என்றவாறு. வேதநாத முடித்தலம் தோய் திருப்பாதம் - வேதமுடிவாகிய உபநிடதங்களிலும், நாதமுடிவிலும பொருந்திய திருவடிகள்.

40. வாசங் கமழுந் தைலமிக
வார்த்துச் சீத்துச் சீர்த்திபெற
வயங்கும் உச்சிக் கொண்டையிட்டு
மலர்மாலைகள்மேற் புனைந்துபிர
காசங் கலந்த சுட்டியுடன்
கவின்ற பட்டம் புயவலயங்
கதிர்முத் தாரத் துடனரைஞாண்
கலந்து சிலம்புஞ் சிலம்பணிந்து
நேசங் கலந்த கோசலைதான்
நின்னை மறுகிற் குறுகவிடல்
நேடி யுருகு மேழையரேம்
நெஞ்சங் கலக்க வோநிறைவார்
தேசங் கலந்த திருவடியாற்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருப்பத் திரவெற் பிசையருமைச்
செல்வா சிற்றில் சிதையேலே. (௪)

(கு - ரை.) சுட்டி - நெற்றிச்சுட்டி. சிலம்பும் - ஒலிக்கின்ற. மறுகில - தெருவில். நேடி - தேடி. தேசம் - ஒளி.

41. தூய வநுமான் கைத்தலமோ
துணைப்பொற் புயமோ சென்னியதோ
துங்கச் சீதா பிராட்டியணித்
தொடியா ரிணைக்கைத் தலமோவான்
றோய விரும்பித் தவப்புரிமெய்த்
தொண்டர் விழியோ கருத்தோநற்
சொல்லோ வதிற்றோய் செம்பொருளோ
துரிய முரியோ வழிபாடு
மேய திருக்கோ யிற்பீட
மேலோ மிதிலை யிசைவழியோ
வேதாந் தமதோ சித்தாந்த
மிசையோ யாமாட் டயர்மணிது

சேய வடிவைத் திடற்கமையாச்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திருப்பத் திரவெற் பிசையருமைச்
செல்வா சிற்றில் சிதையேலே. (ரு)

(கு - ரை.) யாங்கள் விளையாடும் இந்த மண்ணானது அநுமானுடைய உள்ளங்கை முதலியன அல்ல. ஆகையால் அவற்றுட் படத்தக்க உன் திருவடி இந்த மண்ணில் படும்படி சிற்றிலைச் சிதையேல் என்றவாறு. மண் + இது = மண்ணிது.

---

## 9. சிறுபறைப் பருவம்

42. சத்தமுட னேபரிச முருவமிர சங்கந்த
மானவையு ணர்வமைந்த
தன்மையிற் பறவைவிரு கங்களொத் திகமீது
தானுண் டுறங்கிமாயப்
பித்தமிகு காமத்தி லின்பதுன் பங்கொண்டு
பிள்ளைமைப் பேறமைந்து
பேசிடு பொதுத்தகைமை விட்டிடுமே லுற்றிடும்
புறவியென வேகாட்டிட
வொத்தவுடை தேடிப் புனைந்துகா தலியுள்
ளுவந்திடப் பூணணிந்து
முரமில்புதல் வன்பொருட் டறமற்ற பொன்னீட்ட
உன்னுநர்முன் னுவலுருவி னுஞ்
சித்தமிக் கிழிவுளரெ னச்சமர்த் துடனுனது
சிறுபறை முழக்கியருளே
செயபத்தி ராசலவு தயமித்தி ராவுனது
சிறுபறை முழக்கியருளே. (க)

(கு - ரை.) சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் - என்பன ஐந்து அறிவுகள். ஐம்புலன்கள் எனப்படும். விருகம் - மிருகம். இகம் - இவ்வுலகம். பிள்ளைமைப் பேறு அமைந்து - பிள்ளைப் பேறு அடைந்து.

இவ்வுலக வாழ்வுக்கு வேண்டிய் பொருள் மட்டுமே தேடி வாழ்வோர் முன் கூறிய பறவை விலங்குகளினும் இழிந்தவர் எனச் சிறு பறை முழக்கியருள் என்பதாம்.

43. ஐம்புல நுகர்ச்சியே பெரிதென்று வெறிகொண்
டலைந்துயி ருலைந்தொழியுநா
வகமேவு மத்தமுலை முகமேவு மத்தத்
தறைந்திடு முழக்கமுடையார்
வெம்பல வுடம்பையிடு காட்டுய்த் தழற்கொள்ளி
மெய்ச்சிரத் தேமுழங்க
மென்கரத் திட்டிருகண் ணீர்விட்டு வாய்விட்டு
விம்மியழு மைந்தவீடு
மொய்ம்புல வமங்களவில் வாழ்க்கையூடமிழாதுன்
முகின்மேனி கண்டுருகிமோண்
முதிர்சிகி யெனக்களிப் புற்றாடி யேமிக
முழங்கித் துதிக்குமின்பந்
தெம்புலவு வோர்களே பத்தரென வுன்னணிச்
சிறுபறை முழக்கியருளே
செயபத்தி ராசலவு தயமித்தி ராவுனது
சிறுபறை முழக்கியருளே. (உ)

(கு - ரை.) ஐம்புல நுகர்ச்சியே பெரிதென்று வெறிகொண்டு அலையும் மக்களைவிட இராமனுடைய மேகம் போன்ற மேனியைக் கண்டு உருகி மகிழும் வாழ்க்கையே சிறந்தது என்பதாம்.

சிகி - மயில். தெம்பு உலவுவோர்கள் - மகிழ்ச்சியால் வலிமை மிக்கவர்கள்.

44. அலைமுழங் குங்கடலை யுண்டெதிர் முழக்கமுற்
றமைவா னிடம்பொருந்தி
யார்நம்மை யொப்பர்வடி விற்பொழி தலாமுழக்
கம்புமா ரியிலென்னவிண்

தலைமுழுங் களியோதை யார்வரைக் கோயிலார்
தசரத குமாரனென்று
தகுமுழக் கங்கொண் டிடப்பொழிந் தாம்படித்
தலமீது சளசளென்ன
மலைமுழக் கங்கொண்டு தொண்டர்தாட் டுகளெலாம்
வாவிநிறை வித்தாடுவார்
மகிழ்வினி லிராமவென் றோதிடு முழக்கமெதிர்
வாய்விண்டி யம்புமுறைபோற்
சிலைமுழங் குந்தொனியி னுடனிசைந் தபிராம
சிறுபறை முழக்கியருளே
செயபத்தி ராசலவு தயமித்தி ராவுனது
சிறுபறை முழக்கியருளே. (௩)

(கு - ரை.) இப் பாட்டு இராமருடைய வில்லின் ஓசையைச் சிறப்பித்துக் கூறியது.

முழக்கு - ஒலி. தாள் + துகள் = தாட்டுகள். வாவி - குளம். தொனி - ஓசை.

45. பொருப்பணிக் கோயிலை யியற்றிடத் தான்முன்செய்
புண்ணியத் திறநினைந்தே
புளகித்த ராமதா சன்கனிவி னுமமே
புகன்முழக் கும்பணிசெய்வோர்
விருப்பணிப் பொன்றரு முழக்கமும் பெற்றவர்செய்
வேலையின் பெருமுழக்கும்
மேல்வந்து கண்ணுக்கு வார்களி முழக்குமணி
வேதமந் திரமுழக்கும்
தருப்பணிய வாற்றுமந் திரகும்ப வபிடேக
சற்கன்ம மிசைமுழக்குஞ்
சங்குசே கண்டைமணி யாதியின் முழக்கிருஞ்
சலதியின் முழக்கமிகையார்
திருப்பணி முழக்கிசை பெருக்கிற வுனற்கரச்
சிறுபறை முழக்கியருளே
செயபத்தி ராசலவு தயமித்தி ராகுணில்கொள்
சிறுபறை முழக்கியருளே. (௫)

(கு - ரை.) பொருப்பு அணி கோயில் - மலை போன்ற கோயில். இராமதாசன் - கோயில் கட்டிய அடியார். அவர் முழங்கும் இராமநாம முழக்கம். சலதி - கடல். குணில் - பறையடிக்கும் கோல்.

46. அளிமுழக் கிசைபரி மளத்தொடைக் காருருவி
லமைமின்னல் பலவுறுதல்போல்
அவிர்மணிப் பணிகளொன் றேடொன்று தாக்குதலி
னதிர்முழக் குந்தேரின்மேல்
வளிமுழக் குடனுற வசைந்திடு முழக்குமத
மாக்களின் பெருமுழக்கு
மணிவெண் டயத்தாட் பரிக்குலத் தனுமான
வகைமுழக் கும்பரிசனர்
களிமுழக் கும்குலவ வமர்புரியி ராவணன்
கடைமுழக் கம்புரியநீள்
கணைமுழக் கஞ்சமர்க் கண்சிர முடங்கிவீழ்
காட்சிகண் டும்பர்யாரும்
தெளிமுழக் கம்புரி செயல்காட்டல் போலுனது
சிறுபறை முழக்கியருளே
செயபத்தி ராசலவு தயமித்தி ராகடிது
சிறுபறை முழக்கியருளே. (ரு)

(கு - ரை.) இராவணன் போர் புரியுங்காலத்து நிகழும் ஒலி இச் செய்யுளில் கூறப்படுகின்றது. அளி - வண்டு. மணிப்பணிகள் - மணிகள் இழைத்த அணிகள். மதமாக்கள் - மதயானைகள். வெண்டயம் - காலில் அணியும் அணி. சமர்க்கண் - போர்க் களத்தில்.

---

## 10. சிறுதேர்ப் பருவம்

47. தருமீதி னுற்றசுரர் மருவார்ம லர்த்தொகுதி
சரமாரி யிற்பெய்தருளார்
சயராம மிக்கவதி சயபூம வற்புதமெய்
தழைகோம ளத்தவெனவே

மருவீதி யெற்குனது திருவாரி சப்பொனடி
மலர்மீதி லுற்ற பணிலம்
வதிவான சக்கரமெய் தியரேகை தற்பரதன்
மணிமோலி யிற்சிரசிலே
கருவீதி யுற்றுலைய வருபீதி வற்றவருள்
கமழ்பாது கைத்தகையினிற்
கனமேவி டற்கெனுமன் மகண்மாத வப்பெருமை
கனிவாய்வெ ளிப்படுதல்போல்
திருவீதி யிற்பெரிய வரையான பத்திரவொர்
சிறுதே ருருட்டியருளே
தெருண்மாத வத்தருண ருண்மேனி பெற்றவிறை
சிறுதே ருருட்டியருளே. (க)

(கு - ரை.) தருமீதின் உற்ற சுரர் - கற்பகச் சோலையில் வாழ் தேவர்கள். பூம - அரசனே. வாரிசப் பொன் அடி - தாமரை மலர் போன்ற அழகிய திருவடிகள். மோலி - முடி; (கிரீடம்). பணிலம் - சங்கு. சங்கு சக்கர ரேகைகள் பரதன் மணி முடியிலும் தலையிலும் பாதுகையிலும் பதிந்தன. மாதவத்தர் உணர் அருள்மேனி - பெருந்தவம் செய்தவர்கள் நினைக்கும் அருள் வடிவம்.

48. படிகொண்ட மானிடரின் வடிவங்கு லாவியிசை
பலகொண்டு சூரியன்வழிப்
பார்வந்த மன்னவரு ளேர்கொண்டு ளானெனப்
பார்த்தவர்கள் யாருமுணர
வடிகொண்ட தாஞ்சுவடு கொண்டுணர்த் திடுநிலைமை
யாமுலகு ளோரிசைக்கும்
ஆனைவரு முன்புமணி யோசைவரு மென்றதை
யகத்தினினை வூட்டவமைமண்
முடிகொண்ட வர்க்கெலா முலகமுழு தாளுமணி
முடிகொண்ட போகமுய்த்து
மூடிவான காலண்ட முடிவான ஞானபர
முத்தியிற் கூடும் வண்ணம்

செடிகொண்ட பத்திர நன் முடிகொண்ட புத்திரா
சிறுதே ருருட்டியருளே
தெருண்மாத வத்தருண ரருண்மேனி பெற்றவிறை
சிறுதே ருருட்டியருளே. (உ)

(கு - ரை.) இராமன் மண்மீது திருவடி வைத்து நடக்கும் போது, திருவடிச் சுவட்டில் பதிந்துள்ள சங்கு சக்கர ரேகைகள் இவன் திருமாலே, மனித வடிவுடன் வந்துள்ளான் என்பதை யுணர்த்தும் என்றவாறு. அவன் திருவடிபட்ட இடத்து மண்ணைத் தலைமேல் அணிபவர்கள் அத் தலைமேல் மணிமுடி அணிந்து அரசாளும் செல்வத்தை இம்மையிற் பெற்று முடிவில் வீடுபேறும் அடைவர் என்ற கருத்து கூறப்படுகிறது.

ஏர் - மேன்மை. செடி - ஒளி.

49. அணிமிக்க கிட்கிந்தை நகரத்தை வாலியினொ
ரநுசரா கிச்சிறந்த
அன்புற்ற சுக்கிரீ வன்பெற்று ளாக்கினைய
தானசக் கரமுருட்டப்
பணிமிக்க ராவணன் றுஞளி லங்கையம்
பதியினைப் பத்திஞானம்
பல்கியவி பீடணன் றனதறக் கருணையின்
பண்புபொலி யாட்சியாற்றி
மணிமிக்க சக்கர முருட்டிடத் தன்கணீர்
மார்பின்மிசை யேயுருட்டி
வதிபரத னீயுருட் டிடவாழி யாக்கினை
வழங்கிமகிழ் தன்மைகாட்டத்
திணிமிக்க பத்திர கிரித்தலைவ னேயுனது
சிறுதே ருருட்டியருளே
தெருண்மாத வத்தருண ரருண்மேனி பெற்றவிறை
சிறுதே ருருட்டியருளே. (௩)

(கு - ரை.) அநுசர் - தம்பி. ஆக்கினையதான சக்கரம் - ஆணைச் சக்கரம். பணி - அணிகள். பல்கிய - நிறைந்த. இராமனது கருணையால் வாலியின் தம்பி சுக்கிரீவன் கிட்கிந்தைக்கும், இரா

வணன் தம்பி விபீடணன் இலங்கைக்கும், இராமன் தம்பி பரதன் கோசல நாட்டுக்கும் மன்னராயினர் என்ற வரலாறு கூறப் பட்டுள்ளது.

50. மலையான வுடல்பெற்ற நிருதருட னுய்நரி
மகிழ்ந்துமே லூர்ந்துருட்ட
வடித்தவர் கரத்திற் பிடித்தபடை முழுதுதிர
வாரிதி மிகுந்துருட்ட
அலையான வவர்பரிசை கைக்கொண்டு பேய்ச்சிறு
ராடலாய் மிகவுருட்ட
வணியிராக் கதமகளிர் கொங்கைமிசை முத்துமுத்
தாய்க்கணீ ரழுதுருட்டத்
தலையான பத்துறு மிராவணன் மருட்சியாய்த்
தன்கண்கொண் மணியுருட்டத்
தரைப்பள்ளி யார்புய வரைப்பள்ளி மண்டோ
தரிக்குளா குலமுருட்டச்
சிலையான வம்புருட் டும்பத்தி ராசலா
சிறுதே ருருட்டியருளே
தெருண்மாத வத்தருண ரருண்மேனி பெற்றவிறை
சிறுதே ருருட்டியருளே. (௪)

(கு - ரை.) நிருதர் - அரக்கர். அவர் உடல் மலை போன்றது. வடித்து - கூர்மையாக்கி, உதிரவாரிதி - குருதிக் கடல். பரிசை - கேடகம். மருட்சி - மயக்கம். கண்கொள் மணி - கண்மணிகள். மண்டோதரி - இராவணன் மனைவி. ஆகுலம் - கவலை.

51. நீருருட் டியதெழிப் பார்முரி தரங்கத்தி
னிரைகடற் கலையுடுத்த
நிலமகண் மணித்திலக முகமான வெண்டிசையு
நேர்பாத லத்துமிசையார்
காருருட் டியவொலிப் பொன்னுலக மீதினுங்
கடிதுசென் றிடுதிறத்தால்
காரணத் தசரதப் பேர்பெற்ற மன்னவன்
காதலியெ னப்பொருந்தி

யேருருட் டியகேக யன்புரி தவத்தினு
லின்பமெய்ப் புதல்வியாகி
யிகலச்செ னத்தனது பைந்தொடிக் கைம்மலரி
ணைப்பிணைத் தொப்பிலாமாத்
தேருருட் டினள்புதல்வ பத்திரகி ரிக்கிறைவ
சிறுதே ருருட்டியருளே
தெருண்மாத வத்தருண ரருண்மேனி பெற்றவிறை
சிறுதே ருருட்டியருளே. (ரு)

(கு - ரை.) தெழி - ஓசை. முரி - வளைந்த அலைகள். கட லாகிய சேலையுடுத்தவள் நிலமகள். இச்செய்யுளில் தசரதன் என்ற பெயருக்குக் காரணங் கூறப்பட்டுள்ளது. தசம் - பத்து. ரதம் - தேர். கைகேசி - தன் கையிணைப் பிணைத்து அச்சு எனக் கொண்டு தேர் ஓட்டிய திறம் இங்குக் குறிக்கப்படுகிறது.

# மனுநெறித் திருநூல்

(மூலமும் குறிப்புரையும்)

## 43. தாய்

1. அறத்தின் இன்பம் கற்பின் அருந்ததியே போல்வாள்
பெறத்தகும்சே யாகும் பிறப்பு.

2. வறந்தகுணம் சாரா வளமுலையாள் சேயாப்
பிறந்திடலும் நல்அறத்தின் பேறு.

வறந்த குணம் - குணம் அற்ற தன்மை.

3. நெஞ்சுருகி நோற்றிளைத்த நேரிழைக்குச் சேயாதல்
விஞ்சுபுண்ணி யத்தினர்க்காம் வீறு.

நோற்று இளைத்தல் - தவஞ்செய்து இளைத்தல். விஞ்சு - மிகுந்த.

4. பல்சேய் பெறுந்தாயும் பாவமறு புண்ணியச்சீர்
ஒல்சேயைப் போற்றும் உவந்து.

புண்ணியச்சீர் ஒல்சேய் - புண்ணியம் செய்த சேய்.

5. சேயருமை தேராச் சிறுமியர்க்குச் சேயாகில்
ஆயவிடா முன்செய் அறம்.

சேய் - குழந்தை. தேரா - தேராத; அறியாத.

6. கல்விமட்டில் சேயைக் கணவன் வழிநடவும்
செல்விஉடல் தாயவாந் தே.

7. நிந்தைஅறுங் கல்வி நெறியும் அறிதாயைத்
தந்தைஎன் றும் சொல்லத் தகும்.

நிந்தை - குற்றம்.

8. எத்தகைய பொல்லாளே என்றாலும் ஈன்றாளைக்
கைத்தல்இன் றிக் காத்தல் கடன்.

கைத்தல் - வெறுத்தல்.

9. தீயநெறி யாள்எனினும் சேய்விரும்பும் நன்னெறியின்
சாயஇயைந் தாலவளே தாய்.

சாய - சேர்ந்து நடக்க.

10. பாவஉண வூட்டல்அன்ன பண்புடைய தாயைநற்சேய்
ஆவல் வழிதிருத்த லாம்.

பாவ உணவு - கொலையால் வந்த உணவு.

## 44. தந்தை

1. சிந்தைநலம் கல்வி தெய்வபத்தி ஆகியசேர்
தந்தைமைந்தன் ஆதல் தவம்.

சிந்தைநலம் - நற்சிந்தை.

2. தந்தை அறிஞன்எனில் தாய்கெடினுந் தோடம்இல்லை
விந்தைமலி சேய்உதிக்கு மே.

தாய் கெடினும் - தாய் கல்வியறிவு இல்லாதவளாயினும்.

3. பெற்றான்சொல் சற்றும் பிழையாத பிள்ளைஅறி
வுற்றான்என் றேதும் உலகு.

விந்தை - வித்தை; கல்வி.

4. தந்தை குரவன்எனும் தன்மைஅறி தக்கோனே
நிந்தைஇல்சீர் எய்தும் நிலத்து.

தந்தை குரவன் எனும் தன்மை - தந்தையைக் குருவாக நினைக்கும் தன்மை.

5. கல்வி தவம்தீய என்னக் கழறுமப்பன்
சொல்விரும்பொன் ணுது துணிவு.

கழறும் - சொல்கின்ற.

6. தகப்பன் களிகூரத் தக்கமொழி சொல்வன்
குகப்பெருமான் போலுங் குரு.

குகப்பெருமான் – முருகக் கடவுள்.

7. தகவுடையார் யாவருக்கும் தம்மில் சிறந்த
மகவே உதிக்கை வழக்கு.

தகவுடையார் - நல்ல தன்மையுடையவர்.

8. ஈன்ருள் கணவன் இழிந்ததொழில் கைக்கொள்ளார்
வான்ருழ வாழும் மகர்.

ஈன்ருள் கணவன் - தந்தை. இழிந்த தொழில் - தாழ்வான தொழில். வான்தாழ - வானுலகத்தாரும் வணங்கும்படி.

9. புன்னெறியில் தந்தை புகுந்தால் பொருவில்நற்சேய்
நன்னெறிகூ றித்திருத்த லாம்,

புன்நெறி - தாழ்வான வழி; தவருன வழி.

10. தந்தையினைத் தானறியான் தாயறிவாள் என்றுமொழி
முந்து பொதுநூல் முறை,

முந்து - முற்பட்ட.

## 45. உடன்பிறந்தார்

1. கொம்பொன்றில் காய்த்தபைங்காய்க் கொத்தனைய
வம்பொன்ற லேஅறத்தின் மாறு. [பாலர்தம்மில்

கொம்பு – மரக்கிளை. பாலர் - பிள்ளைகள்.

2. உடன்பிறந்தார் தம்மை உடனுறுப்பில் தாங்கும்
கடன்பிறழார் கற்றறிந்தோர் கள்.

கடன் - கடமை. பிறழார் - தவறமாட்டார்.

3. முன்னனைத் தந்தைஒப்ப மூத்தாளைத் தாயரொப்பப்
பின்னோர் நினைத்தொழுகல் பீடு.

முன்னன் - தமையன். மூத்தாள் - தமக்கை. பின்னோர் - தம்பி, தங்கையர்.

4. ஒருவன் உற்றநன்மை உடன்பிறந்தார் எல்லாம்
மருவ முயலல்பெரு மாண்பு,

மருவ முயலல் - தாமும் அடைய முயலுதல்.

5. அறத்தில் ஒத்தஐவர் அநீதியிற்சார் பல்லோர்
இறத்தல்கண்டு வாழ்ந்தார் இனிது.

ஐவர் - பாண்டவர் ஐவர். அநீதியிற் சார்பல்லோர் - நீதி முறை தவறிய நூற்றுவர் (அநீதியிற் சார்ந்த அல்லோர்).

6. கலகம்இன்றி முன்பின் கலந்திருப்பக் காணல்
உலகத் ததிசயத்தில் ஒன்று.

முன்பின் - அண்ணன் தம்பிகள். உலகம்+அத்து = உலகத்து.

7. தங்கையரால் தம்பியரால் தாழ்ந்தோர்க்கும் வாழ்ந்
சங்கையில்லை சொல்லும் சகம். [தோர்க்கும்

சங்கை - அச்சம். சகம் - உலகம்.

8. நாடறிய உண்மை நவின்றும்ஒப்பாச் சோதரரை
வீடணன்போல் நீங்கல் விதி.

ஒப்பா - ஒப்புக் கொள்ளாத. சோதரர் - உடன் பிறந்தார்.

9. சிங்கன் குடக்காதன் அன்னர் சிதைந்ததுவும்
தங்களுக்கா கும்தருமம் தான்.

சிங்கன் - சிங்கமுகாசூரன். குடக்காதன் - கும்ப கர்ணன்.

10. அறிஞர் உடன்பிறத்தல் ஆன்றஅறத் தார்வம்
பிறிதுமுன்னுள் பாவப் பிணி.

## 46. மனைவி

1. தன்னுயிரில் பாதி தனைஇழந்த பின்னும்உயிர்
மண்ணுலகில் வாழாள் மனை.

தன் உயிரில்பாதி - மனைவிக்குக் கணவன் பாதி உயிர் என்ற கருத்து.

2. ஆவற் குரியாள் அறத்தில்ஒரு பாதிகொண்டு
பாவமுற்றுந் தற்சேர்ப் பவள்.

3. மனையினுமிக் காரும் மானிலத்துண் டென்பார்
தினையுமுணர் வில்லாச் சிலர்.

மனைவியைவிடச் சிறந்தவர் கணவனுக்கு வேறு ஒருவருமில்லை. பெண்ணிற் பெருந்தக்க யாஉள - என்ற குறளின் கருத்து.

4. பொற்புமதன் நேர்வரினும் புந்தி தடுமாறுக்
கற்புடையாள் நல்கும் கதி.

கதி - மேலான வாழ்வு.

5. சொற்றவருள் கொங்கைத் துணைதோயும் தோளுடையார்
நற்றவரும் போற்றும் நரர்.

சொல் தவருத மனைவியோடு வாழும் இல்லறத்தானைத் துறவிகளும் போற்றுவர்.

6. மானம் புரக்கும் மனைதோள் அணைவானே
ஈனம் சிறிதும் இலான்.

கணவனுடைய மானத்தைக் காப்பவளே சிறந்த மனைவி.

7. உவக்கும் இன்பம்நல்கி, உடன்போய்ச்சில் மாதர்
தவத்தினிலும் பங்குகைக்கொண் டார்.

8. கொண்கன் ஒருவற்குக் கொடுக்கினும்பின் போம்அவனே
பெண்கள்அவர் மாட்சி பெரிது.

கொண்கன் - கணவன். இயற்பகை நாயனர் வரலாறு இங்குக் கருதத்தக்கது.

9. தவம்பெருக்கும் ஆடவரில் தாழ்ச்சிஅன்று, கற்பின்
நவம்பெருக்கும் மாதர்நல் லார்.

தவம் செய்யும் ஆடவரைப் போலக் கற்பிற் சிறந்த மடவாரும் சிறந்தவர் ஆவர்.

10. தன்ன தவயவம்நேர் தன்மையுறு தையல்நல்லாள்
பின்னமுறக் காண்பவனோர் பேய்.

மனைவியைத் துன்புறுத்துவோன் பேய்க்கு ஒப்பானவன்.

## 47. மக்கள்

1. இருவகைய நன்மகவும் ஈன்றுவக்கப் பெற்ற
ஒருவன் தவமே உயர்வு.

இருவகைய நன்மகவு - ஆண் பெண் மகவு.

2. பொய்யாது தந்தை புகழ்வளர்க்கும் புத்திரனே
மெய்யாய வீட்டுக்கோர் வித்து.

பொய்யாது - உண்மையாக.

3. மாதவம் செய்து மரபோர் அனைவருக்கும்
ஓதரும்வீ டுந்தமக்கள் உண்டு.

பின் பிறந்த மக்கள் தவத்தால், முன்னோர் வீடு பெறுதல் உண்டு என்பது கருத்து.

4. தவத்தோர் விழைவில் தனயர்களை நல்கிச்
சிவத்தே கலந்தார் சிலர்.

நல்குதல்-உலகுக்குப் பயன்படுமாறு பெற்றெடுத்தல். சிவத்தே கலத்தல் - வீடுபேறு அடைதல்.

5. தவம்உடையான் தோள்மருவத் தக்கமகள், பெற்றான்
எவனவனே விண்ணாட் டிறை.

தவஞ்செய்வோனுக்கு மகளைக் கொடுப்பவன் சிறந்தவன் ஆவன்.

6. இறந்த கணவனுடன் ஏழ்கடல்நீ ராடிச்
சிறந்தவட்க நீந்ததொர்பெண் சேய்.

இறந்த கணவன் - மலையத்துவச பாண்டியன். பெண் சேய் - தடாதகைப் பிராட்டி.

7. முனிவர்பன்னுள் தேடும்முதல் முத்தியினைப் பற்பல்
மனிதர்கட்கீந் தானோர் மகன்.

பற்பல் மனிதர்கள் - திருஞான சம்பந்தரோடு ஆச்சாள் புரத்தில் வீடு பெற்ற அடியார்கள். மகன் - திருஞான சம்பந்தர்.

8. பத்தியொடு கல்விப் பயிற்சியுறு சேய்ப்பயந்தார்க்
கெத்திருவும் எய்தல் எளிது.

பத்தியும் கல்வியும் உடைய மைந்தனைப் பெற்றவர் எல்லாத் திருவும் எய்துவர்.

9. உடலோ டுயிர்க்கும் உலப்பில் உவகைக்
கடலீயத் தக்கதுநற் கால்.

கால் - மகன். தந்தைக்கு மகிழ்ச்சி தருபவன் சிறந்த மகனாவான்.

10. மக்கள் அறத்தில் வழுவாத வாறொழுகத்
தக்கவரைப் போற்றுந் தரை.

மக்கள் அறம் - மக்களுக்குரிய அறம். அறம் வழுவாது ஒழுகும் மக்களை மாநிலத்தார் போற்றுவர்.

## 48. சுற்றம்

1. தாயருந்தும் ஊன்விழையா நல்லசுற்றத் தார்நடுவில்
மேயவன்தன் புண்ணியமே மேல்.

ஊன் உண்ணாதாரைச் சுற்றமாகக் கொள்ளுதல் வேண்டும்.

2. புன்குலத்தில் வந்தோன் புனிதநடை மேற்கொளினும்
நன்கு மதியார் நரர்.

புன்குலத்தில் வந்தோன் - தாழ்ந்த குலத்தில் பிறந்தவன். புனிதம் - தூய்மை. நடை - ஒழுக்கம். நரர் - மனிதர்.

102769

3. நற்குலத்தில் வந்தோன் நவைஒழுக்கம் நாடுங்கால்
கற்கிபொதி தாங்கல் கரி.

நவை ஒழுக்கம் - கெட்ட செயல். கற்கி பொதிதாங்கல் - குதிரை மூட்டை சுமத்தல்.

4. சுற்றம் முழுவதையும் தூய்தாக்க நாடுமனம்
உற்றவனை எள்ளா துலகு.

தூய்து ஆக்க - தூய்மைப் படுத்த. எள்ளாது - இகழாது.

5. அறநெறியில் சுற்றத் தவர்க்கடங்கு மாபோல்
மறநெறியில் நீங்குதலும் மாண்பு.

அறநெறி - தருமவழி. மறநெறி - பாவவழி.

6. குலத்தொருவன் தாழ்ந்து குடியோட நாடில்
தலத்தமைப்பார் நல்லசுற்றத் தார்.

குடி ஓட - குடிபெயர்ந்து ஓட. அமைப்பார் - வாழச்செய்வார்.

7. தீயகுலத் தார்கள்தம்மில் சீர்த்தொருவன் வாழல்கண்
நேயங் கொதிப்பார் நெடிது. [டால்

ஒருவன் சீர்த்து வாழ்தல் - ஒருவன் சிறப்புற்று வாழ்தலை.

8. எறும்பாடு கொக்கனைய தெக்குலமா னாலும்
பெறும்பார் மதித்திறைஞ்சும் பீடு.

எறும்பு + ஆடு = எறும்பாடு. பார் - மாநிலத்தில் உள்ள மக்கள்.

9. கோழிநாய் பூனை அனைய குலமுழுதும்
கீழினுங்கீழ் ஆகிக் கெடும்.

கோழி நாய் பூனை அனையகுலம் - எப்பொழுதும் பகைகொண்டு போரிடும் குலம்.

10. செல்வன், இனத்தார்போம் தீய வழிஅடைத்து
நல்வழியில் ஓச்சும் நயந்து.

இனத்தார் போம் தீயவழி - தன் இனத்தார் மேற்கொண்டுள்ள கெட்டவழி.

---

O-,15NKA8,R
N77

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
1920

தலைமை நிலையம் :
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :
திருநெல்வேலி-6.
மதுரை-1. கோயமுத்தூர்-1.
கும்பகோணம்-1. திருச்சிராப்பள்ளி-2.

மேனுறை திருவரங்கனுர் அச்சகத்தில்
அச்சிடப் பெற்றது.